# சாபா (Zhaba)




**வசிப்பிடம்:** கி.பி.1983 ல் வெளியிடப்பட்ட ஓர் ஆவணத்தில் 15,000 சாபா இனமக்கள் சீனாவில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கு சிசுவான் மாநிலத்தில் கர்செ (Garze), திபெத்திய தன்னாட்சி மாகாணத்தின் யாச்யாங் (Yajiang) மற்றும் தாவ்பு (Daofu) மாவட்டத்தின் பகுதிகளில் இவர்கள் வாழ்கிறார்கள். இப்பகுதி, சீனர்கள் சிசுவானோடு இணைக்கும் வரை திபெத்தின் கம்(Kham) மாநிலத்தைச் சேர்ந்ததாக இருந்தது. ஓர் ஆவணம் கூறுகிறது 'சாபாக்கள் உயரமான மலைகள் மற்றும் வேகமாகப் புரண்டோடும் நதிகளின் மத்தியில் கடினமான வாழ்க்கை நடத்துகின்றார்கள். பெரும்பாலான சாபாக்கள் தாவ்புவிலிருந்து யாச்யாங் நோக்கிப் பாயும் ஷியன்ஸுயை (Xianshui) நதி ஓரத்தில் வாழ்கின்றார்கள்.' தாவ்பு மாவட்டத்தின் மையப்பகுதி சாபா பட்டணமாகும், இதன் மக்கள்தொகை 5,200 ஆகும். கி.பி. 1997 ல் அரசாங்கம் மரம் வெட்டும் ஆலைகளைச் சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக மூடிய போதிலிருந்து இவர்கள் மின்சாரம் மற்றும் தொலைப்பேசி வசதிகளின்றி வாழ்ந்துவருகின்றார்கள். மரம் வெட்டும் பணி மிகுந்த ஆதாயம் தரக்கூடியதாக இருந்தது அதினால் இந்த ஆலைகள் மூடப்பட்டபோது மின்சாரம் மற்றும் தொலைப்பேசி வசதியும் கூடவே துண்டிக்கப்பட்டது.

**அடையாளம்:** சாபாக்கள் கலாச்சாரத்தின்படி திபெத்தியர்களாக இருந்தாலும்கூடச் சுற்றியுள்ள மற்ற திபெத்தியர்கள் புரிந்துகொள்ள இயலாதபடி இவர்கள் மொழி திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தின் ஷியங் துணைப் பிரிவைச் சேர்ந்ததாகும்.

**வரலாறு:** பெரும்பாலானோர், சாபாக்களே இப்பகுதியின் பூர்வீகக்குடிகள் என ஏற்றுக்கொள்கிறார்கள். 'வட சீனாவில் மங்கோலிய யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டபின் இவர்கள் இப்பகுதிக்கு வந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது.' இவர்களது வரலாறு முழுவதும் இவர்களுடைய சமுதாயம் தாய்வழியாட்சிமுறையைச் (Matriarchy) சேர்ந்ததாகவே இருந்துவந்தது. இந்நாட்களிலும் தொலைதூரங்களிலுள்ள கிராமங்களில் பெண்கள் குடும்பத்தை ஆளுகின்றார்கள்; தந்தை தன் பிள்ளைகளை வளர்க்காமல் தன் சகோதரியின் பிள்ளைகளை வளர்க்கிறார். பெண்ணின் திருமணத்திற்குரிய முடிவுகளைத் தாயும் தாய்மாமன்களுமே எடுக்கின்றார்கள்.

**பழக்கவழக்கங்கள்:** மார்க்கோ போலோ 13 ஆம் நூற்றாண்டில் திபெத்திய கிராமப்புறங்களின் வழியாகச் செல்லும்போது ஒரு தனித்தன்மையான உள்ளூர் வழக்கத்தைப் பார்த்தார். போலோ எழுதுகிறார் 'இப்பகுதியின் எந்த ஆணும் எந்த ஒரு காரணத்தின் நிமித்தமும் ஒரு கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்ய முன்வருவதில்லை, ஆண்களோடு சகவாசம் வைக்கும் பழக்கம் இல்லாத மனைவி பயனில்லாதவள் எனக் கருதுகின்றார்கள்... அவ்வழியாக வழிப்போக்கர்கள் வரும்போது, வயதான பெண்கள் தங்கள் குடும்பத்திலுள்ள திருமணமாகாத கன்னிப்பெண்களை ஆயத்தம் செய்து, அவர்களை ஏற்றுக்கொள்பவர்களிடத்தில் கொண்டு செல்கின்றார்கள்...இவ்விதமாக அவ்வழியாகப் பயணம் செய்பவர்கள் அநேகமாய் 20 லிருந்து 30 பெண்கள் தங்களிடம் கொண்டுவரப்படுவதைக் காண்பார்கள்.' உடலுறவில் ஒழுக்கமின்மை சாபாக்கள் மத்தியில் தொடர்ந்து பெருகிக்கொண்டுள்ளது. கி.பி. 1950 ல் கன்சு மாகாணத்தில் செய்யப்பட ஓர் ஆய்வில் பாலியல் நோய் வீதம் கிராமப்புறங்களில் 40 சதவீதமாகவும், மேய்ப்பு நிலங்களில் வசிப்பவர்கள் மத்தியில் 50.7 சதவீதமாகவும் இருந்தது.

**மதம்:** சாபாக்கள் விதவிதமான பூதங்களையும் பேய்களையும் வணங்குகின்றார்கள். இந்த ஆதிக்கம் புத்தமதத்திற்கு முன்னிருந்த பொன் மதத்திலிருந்து வந்ததாகும். இந்நாட்களில் இவர்களுடைய மதம் புத்த மற்றும் பொன் மதத்தின் கலப்பாக உள்ளது. 'சாபா பட்டணத்தின் வடக்கில் ஒரு பொன் கோயிலுள்ளது. இதை மூன்று குழுக்கள் பயன்படுத்துகின்றார்கள், எந்த நேரத்திலும் இங்கு 30 துறவிகளைக் காணமுடியும். ஒவ்வொரு சாபா கிராமத்திற்கும் ஒரு சொந்தக் கோயிலும் விசேஷ நாட்களில் வழிபாடு செய்யச் செல்லும்படி ஒரு தனிப் புனித மலையும் உள்ளது.

**கிறிஸ்துவம்:** இவர்களுக்கு மேற்கில் லீதாங்கில் (Litang) சில கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் இருந்தாலும்கூடச் சாபாக்கள் மத்தியில் அறியப்பட்ட கிறிஸ்தவர்கள் யாருமில்லை.




**Population:**
20,900 (2000)
25,750 (2010)
31,700 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Zaba, Zhaboa, Buozi

**மக்கள்தொகை:** 15,000 in China (1983, Sun Hongkai)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், ஷியங் மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Western Zhaba, Eastern Zhaba)

**திபெத்திய புத்தமதம்:**100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : ZHA

## கிறிஸ்துவத்தின் நிலை




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்